**கவனிக்க.**-2022.07.01 ஆந் திகதிய 2287 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி III, பகுதி IV(அ) பிரசுரிக்கப் படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2288 - 2022 ජූලි මස 08 වැනි සිකුරාදා - 2022.07.08

*2288 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1062 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1052 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1053 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-(i) சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு சட்டமூலம் 2022, யூன் மாதம் 17ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2022, யூன் மாதம் 17ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) கைத்தொழில் பிணக்குகள் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூன் மாதம் 17ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூலை மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1051 - B 082361 - 5,403 (2022/07)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்- பொத்துவில்

அரசுடைமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத சான்றுப் பொருட்களை பகிரங்க ஏல விற்பனை செய்தல்

இந் நீதிமன்றில் வழக்குகளுடன் தொடர்புடைய சான்றுப் பொருட்கள் என முன்வைக்கப்பட்ட பொருட்களில் அரசுடைமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத பின்வரும் பொருட்கள் 2022. 07.13 ஆந் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து பொத்துவில் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

இதன் கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் சம்பந்தமாக யாராயினும் உரிமை கோருவாராயின், ஏல விற்பனை ஆரம்பிக்கப்பட முன்னராக அதன் உரிமையாளர் தமது உரிமைக் கோரிக்கையை முன் வைக்க முடியும்.

ஏல விற்பனைக்கெனத் தீர்மானிக்கப்பட்ட பொருட்களை ஏல விற்பனை நடைபெறும் தினத்தில் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னராக நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியைப் பெற்றுப் பார்வையிட முடியும்.

நீதிமன்றினால் தீர்மானிக்கப்பட்ட ஆகக் குறைந்த மதிப்பீட்டுத் தொகை எட்டப்படாத சந்தர்ப்பத்தில் நீதிமன்றின் தற்றுணிபின் பிரகாரம் அந்தப் பொருட்களை ஏல விற்பனையிலிருந்து விலக்கிக் கொள்வதற்கு நீதிமன்றிற்கு அதிகாரம் உள்ளது.

ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு அவ்விடத்திலேயே பணத்தைச் செலுத்தி அதே தினம் நீதிமன்ற வளாகத்திலிருந்து எடுத்துச் செல்வதுடன் பணமாக மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏல விற்பனையின் போது பொருட்களைக் கோருபவர் தனது விபரத்தை உறுதிப்படுத்துமுகமாக தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஏ.சீ. ரிஸ்வான்,
மாவட்ட நீதிபதியும், நீதிவானும்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
பொத்துவில் .
2022.06.27.

**பொத்துவில் மாவட்ட /நீதிவான் நீதிமன்றில் 2022.07.13 ஆந் திகதி பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களின் விபரம்**

இணைப்பு இல.1

| தொ.இல. | வழக்கு இல. | வாகன விபரம் | பதிவு இல. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | AR/ 6612/ 20 | மோட்டார் சைக்கிள் | 49CC | உதிரிப்பாகமாக மட்டும் |
| 2 | AR/ 6290/ 19 | மோட்டார் சைக்கிள் | EP GU- 8441 | - |
| 3 | 20193/PC/ 15 | DIMO பட்டா | EP PU- 9395 | - |

பொத்துவில் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றில் 2022.07.13 ஆந் திகதி பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களின் விபரம்

இணைப்பு இல.2

| தொ.இல. | வழக்கிலக்கம் | | | சான்றுப் பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 31296 | F | 2022 | மரம் வெட்டும் கத்தி | 1 |
| 2 | 31298 | F | 2022 | மரம் வெட்டும் கத்தி | 1 |
| 3 | 31299 | F | 2022 | மரம் வெட்டும் கத்தி | 1 |
| 4 | 31293 | F | 2022 | சவள் | 1 |
| 5 | 31347 | F | 2022 | சவள் | 1 |
| 6 | 31348 | F | 2022 | சவள் | 1 |
| 7 | 31382 | F | 2022 | மண்வெட்டி | 1 |
| 8 | 31382 | F | 2022 | புல் வெட்டும் வீச்சுக் கத்தி | 1 |

| தொ.இல. | வழக்கிலக்கம் | | | சான்றுப் பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 9 | 31393 | PC | 2022 | சவள் | 1 |
| 10 | 31417 | PC | 2022 | சவள் | 1 |
| 11 | 31446 | PC | 2022 | சவள் | 1 |
| 12 | 31450 | PC | 2022 | சவள் | 1 |
| 13 | 31443 | PC | 2022 | இரும்பு வாளி | 1 |
| 14 | 31471 | F | 2022 | மண்வெட்டி | 4 |
| 15 | 31471 | F | 2022 | அலவாங்கு | 1 |
| 16 | 31499 | PC | 2022 | சவள் | 1 |
| 17 | 31502 | PC | 2022 | சவள் | 1 |
| 18 | 31515 | PC | 2022 | சவள் | 1 |
| 19 | 31554 | F | 2022 | மரம் வெட்டும் கத்தி | 1 |
| 20 | 31542 | PC | 2022 | சவள் | 1 |
| 21 | 31543 | PC | 2022 | சவள் | 1 |
| 22 | 24618 | F | 2018 | மரம் வெட்டும் கத்தி | 2 |
| 23 | 31552 | F | 2022 | கோடரி | 1 |
| 24 | 31553 | F | 2022 | கோடரி | 1 |
| 25 | 31554 | F | 2022 | மரம் வெட்டும் கத்தி | 1 |
| 26 | 21025 | F | 2022 | கோடரி | 1 |
| 27 | 31579 | PC | 2022 | சவள் | 1 |
| 28 | 31584 | PC | 2022 | மரம் வெட்டும் கத்தி | 1 |
| 29 | 31539 | PC | 2022 | இரும்பு வாளி | 1 |
| 30 | 31538 | PC | 2022 | இரும்பு வாளி | 1 |
| 31 | 31617 | PC | 2022 | சவள் | 1 |

07- 124

---

## ஆய விற்பனையும் குத்தகையும்

### லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில் 2023 ஆம் ஆண்டுக்கான கள்ளுத்தவறணைகளுக்கான குத்தகை விற்பனை

*2023, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2023, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்ட லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவின் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 207 கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2022.08.10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிவரையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இத்தால் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.*

*2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள ஏதாவதொரு பிரதேச செயலகத்தினூடாக பெற்றுக்கொள்ளக்கூடியதான குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்தி செய்து இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரக் கட்டணத்தை செலுத்தி வருமான சான்றுப்பத்திரத்துடன் முகவரியிடப்பட்ட கடித உறையினுள் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள கள்ளுத் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக குறிப்பிட்டு அந்த தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலம் லுணுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திரப் படிவங்களை பூரணப்படுத்தும்போது கேள்விப் பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண ஒப்பமிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

4. கேள்விப்பத்திரதாரர்களால் லுணுகலை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேச சபை எல்லைக்குள் பொருத்தமான இடத்தினை தெரிவு செய்தல் வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2022.08.10 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் லுணுகலை பிரதேச செயலகத்திற்கு சமுகம் தரல் வேண்டும்.

6. யாதேனும் விடயமொன்றினை குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அனைத்து கேள்விப் பத்திரங்களையோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. மேற்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2022.09.07 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளிற்கமைவானதாயிருத்தல் வேண்டும்.

8.ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக்கொண்டார் என பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினம் பி.ப.2.00 மணிக்கு முன்னதாக அவர் லுணுகலை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாதக் கட்டணத்திற்கு கூடுதலான தொகையினைச் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு ஒப்பமிடுதல் வேண்டும்.

9. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் தொடர்பாக அறிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களை லுணுகலை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டீ.எம்.என்.திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலகம்,
லுணுகலை,
2022, யூன் 27 .

**அட்டவணை**

***2023 ஆம் வருடத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகள்***

லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவு

**2023.01.01 தொடக்கம் 2023.12.31 வரை**

| தொடர் இல. | தவறணையின் பெயரும் முகவரியும் | பிரிவு | பி.செ.பிரிவில் தவறணையின் அமைவிடம் | தவறணை திறக்கப்படுகின்ற நேரம் | தவறணை மூடப்படுகின்ற நேரம் | கேள்வி வைப்புத் தொகை | கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | இல.02 லுணுகலை | லுணு கலை | கேள்விப் பத்திர தாரர்களால் லுணுகலை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேச சபை எல்லைக்குள் பொருத்தமான இடத்தினை தெரிவு செய்தல் வேண்டும் | மு.ப11.00 பி.ப. 05.00 | பி.ப. 02.00 பி.ப. 08.00 | ரூபா.5000.00 | 2020.08.10 மு.ப. 10.30 |

***மீள் விற்பனை செய்யும் திகதி***: சிறந்த கொள்வனவாளர் முன் வராவிடின் 2022.09.07 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும்.

மஹதோவ தோட்ட எல்லைக்குள் இரவு நேர சிற்றுண்டிச்சாலைக்கு 2022 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பது தொடர்பான சிபாரிசினை தோட்ட முகாமையாளர் 2022.08.10 ஆந் திகதிக்கு முன்னதாக கிடைக்கத்தக்கவாறு லுணுகலை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

07-77

## பதுளை பிரதேச செயலாளர் பிரிவின் 2023 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை

2023, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2023, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 2 ஆந் திகதிய 207ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2022.08.09 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலேனும் 5000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளக்கூடிய குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்திசெய்து இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் படிவத்தின் கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரத்தின் பெறுமதியில் 20% இற்கு மேற்பட்ட வருமானச் சான்றுப்பத்திரத்துடன் முகவரிடப்பட்ட முத்திரையிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தினையும் பெயரையும் தெளிவாகக் குறிப்பிட்டு அந்த தவறணைக்காவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுவதன் மூலமோ பதுளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களைப் பூரணப்படுத்தும்போது கேள்விப்பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2022.08.09ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்தப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினைக் குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்குண்டு.

6. முன்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2022.09.29ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

7. ஒருவர் சுய உரித்தினைப் பெற்றுக் கொண்டாரென பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக அவர் பதுளை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாதக் கட்டணத்திற்கு கூடுதலான தொகையை என்னிடம் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு கையொப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களை பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டீ. எம். எல். எச்.திசாநாயக,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2022.06.22.

**அட்டவணை**

**பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணைதொடர்பான விபரம் - 2023**

*(2023.01.01 ஆந் திகதி தொடக்கம் 2023.12.31 ஆந் திகதிவரை)*

| கள்ளுத் தவறணை யின் பெயர் மற்றும் முகவரி | பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கப்படும் நேரம் | கள்ளுத் தவறணை மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|
| பதுளை இலக்கம் 01 கள்ளுத் தவறணை | பதுளை | பதுளை மாநகர சபை இல. 6 ஆம் பிரிவின் ஹாலுகொடுவ எனும் அரச காணி | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூ. 5,000 | 2022.08.09 ஆந் திகதி மு. ப. 10.30 |

***மீண்டும் விற்பனை செய்யப்படும் திகதியும் நேரமும்:-*** *சிறந்த கொள்வனவாளர் முன்வரவில்லையெனில் 2022.09.29 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும்.*

07-75

---

**கண்டி கடவத்சத்தர கங்க வட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு விற்றல் - 2022/ 2023**

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2022/2023 ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2022.08.24ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்-

(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் முன் வைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விக்காரர்களுக்கு மேற்படி கள்ளுத் தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைபிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்துத் திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்கக் கையெழுத்தொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட -

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு அந்தக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விக்காரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பில் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையான அளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப்பத்திரத் தொகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்விப் பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்விப்பத்திரத்தை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாகத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. கள்ளுத் தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க் கணக்கில் கள் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையிலும் வேறு காரணங்களுக்காகவும் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்கக் கள்ளுத் தவறணையைத் தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்க வேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு தவறணைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்யமுடியாதுபோன எஞ்சிய கள்ளுத் தவறணைகளை மீண்டும் 2022.09.26 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்தக் கேள்விகளை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ள முடியும்.

யூ. ஜே.எம்.எஸ்.எஸ். பி. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை,
2022.06.24.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் 2022/2023 ஆம்ஆண்டுக்காக அனுமதியளிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல்**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 வட்டபுலுவ | கண்டி பிரிவில் இல. 20 மஹய்யாவ மற்றும் இல. 7, மாபனா வதுர தேர்தல் பிரிவு | கட்டுகஸ்தொட்டை வீதியில் அந்த வீதியும் திருகோணமலை வீதி சந்தியில் கட்டுகஸ்தொட்டை வீதியும் வட்டாரந்தென்ன சந்திக்கும் இடையிலான பாதை, கண்டி மாநகரில் இல. 20 - மஹய்யாவ மற்றும் இல. 07 - மாபனாவதுர தேர்தல் பிரிவில் அமைந்துள்ள பிரதேசம் | மு. ப. 11.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 மணி தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2022.08.24 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

**கள்ளுத்தவறணை குத்தகைக் கேள்விகளுக்கான இறுப்புப் பணம் - 2022/2023**

| | | | |
|---|---|---|---|
| இல. 01 | வட்டபுலுவ | கள்ளுத் தவறணைக்கான குத்தகை | ரூபா 5,000 |

07-92/1

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய அமெரிக்க குடியரசு, Gaithersburg maryland 20878 ஐச் சேர்ந்த அத்துடன் தற்போது தெஹிவளை, நிக்கப்பே, விஜயராஜ மாவத்த, இல. 40/6 ஐச் சேர்ந்த அமலகே தொன் சந்ரசிறி ( தே.அ.அ.இல. 581830360V) ஆகிய நான், இலங்கையில் எனது அற்றோணிதாரராக மொறட்டுவ, ஹோரேதுடுவ, நாகஹ வரய வீதி, இல. 56/ 41 ஐச் சேர்ந்த தொன் லக்ஷ்மன் ஜயவர்தன (தே.அ.அ.இல. 603611080V) ஐ நியமித்து கொழும்பு பிரசித்த நொத்தாரிசு M.R.D. பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.06.10ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித் தத்துவ இலக்கம் 3430 ஐ நான் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் சொல்லப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை பயன்படுத்தி சொல்லப்பட்ட அற்றோணிதாரரால் இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளும் செல்லுபடியாகாது.

அமலகே தொன் சந்ரசிறி.

07-60

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு -06, பசில்ஸ் ஒழுங்கை, இல. 86-1/1 தற்காலம் இல. 46, 3/2 அருத்துசா ஒழுங்கை, கொழும்பு -06 இல் வதியும் சிவஞானசுந்தரம் தயாளன் (தேசிய அடையாள அட்டை இல. 522682187V) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருவது யாதெனில், கொழும்பு காணிப்பதிவகத்தில் 2014, பங்குனி மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 979 ஆம் இலக்க தினப்புத்தகத்தின் கீழ், 03 ஆம் புத்தகத்தில் 57 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டதும் இல.86-1/1 , பசில்ஸ் ஒழுங்கை, கொழும்பு 06 , தற்காலம் இல. 46- 3/2 , அருத்துசா ஒழுங்கை, கொழும்பு 06 இல் வதியும் திருமதி சுமித்திரா தயாளன் (தே.அடையாள அட்டை இல. 586271393V) என்பவருக்கு வழங்கியதும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திருமதி எஸ். இராஜகுலேந்திரா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2014 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆந் திகதியிடப்பட்ட 1592 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது. அத்துடன் எனது சார்பாக அவர்களால் மேற்கொள்ளப்படும் எக்காரியத்திற்கும் நான் பொறுப்பாளியல்ல.

சிவஞானசுந்தரம் தயாளன்,
(தேசிய அடையாள அட்டை இல. 522682187V)

இல. 46, 3/2 அருத்துசா ஒழுங்கை,
கொழும்பு -06 .

07- 61

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தின், உடுபத்தாவ தபால் பிரிவில் பிபிலா தெனியவில் வசிக்கும் வர்ணகுலசூரிய எலிசபெத் மியுரின் ( கடவுச்சீட்டு இல. N 5081527) ஆகிய நான், மேற்படி உடுபத்தாவ தபால் எல்லையில் பிபிலாதெனியவில் வசிக்கும் தெமிலஸ் வர்ணகுலசூரிய (தே.அ.அ.இல. 495620689V) என்பவருக்கு, வெலிபென்ன கறமுல்ல தபால் மீகஹபெலஸ்ஸவில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு திரு. டி.ஜே.எம்.ஈ. வி. ஜயமஹவினால் 2003, சனவரி 09 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 9589 ஆம் அற்றோணித்தத்துவத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரத்தை இன்று முதல் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சகல மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

வர்ணகுலசூரிய எலிசபெத் மியுரின்.

2022, யூன் 03.

07-62

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல.175, சதுட்ட மாவத்தை, ராஜஎல, ஹிங்குரக்கொடவைச் சேர்ந்த கொனகலாகல தல்கஸ் தன்னே கெதர துஷித செனரத் (தே.அ.அ.இல. 672812917V) இல. 100/ 02, குமரிமுல்ல, பூகொடவைச் சேர்ந்த மொஹமட் ஹனீபா நஸ்லி (தே.அ.அ.இல. 710520151V) ஆகியவருக்கு என்னால் வழங்கப்பட்ட கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு மடுலாகே டொனா பிரியங்வட சிறிவர்தனவால் உறுதிப்படுத்தப்பட்ட 2020, செத்தெம்பர் 22 ஆந் திகதியிடப்பட்ட 124 உடைய அற்றோணி அதிகாரத்தை இத்தால் இரத்துச் செய்வதுடன் அந்த அற்றோணி அதிகாரம் 2022, மே 31 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்பட்டு நீக்கப்பட்டதுடன் எனது அற்றோணி உரிமையாளர் என்ற வகையில் கூறப்பட்ட அற்றோணி அதிகாரம் மூலம் செய்யும் எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பேற்கமாட்டேன்.

கொனகலாகல தல்கஸ் தன்னே கெதர துஷித செனரத் .

07-70

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

Switzerland, CH- 2363 Les Enfers, Village- 22 என்ற முகவரியையும் இலங்கை, இந்துருவ 80510, கைக்காவள, காலி வீதி, பிளாக் ஓர்கிட், பீச் ஹோட்டல் என்ற முகவரியைச் சேர்ந்தவரும் Celine Ariane Dirlewanger Gunsch Von Aarau ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜி. ரூபசிங்ஹ என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டதும், 2022, பெப்புருவரி 21 ஆந் திகதியிடப்பட்டதும் 54 ஆம் பக்கத்திலும் 07 ஆம் பாகத்திலும் களுத்துறை, காணிப் பதிவகத்தில் பதிவு பெற்றதும் இலங்கை, தர்கா நகரம், மீகம, நுககஹாகந்த, 53 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அனகிரிபுர அனோமா ஜானகி அபேவர்தன என்பவருக்கு (785370465V) என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்டவர்) என்பவருக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு அற்றோணித் தத்துவமானது 2022, யூலை 01 ஆந் திகதியிலிருந்து இத்தால் வெறிதாக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன்.

Celine Airane Dirlewanger Gunsch Von Aarau .

2022, யூன் 30.

07-118

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, கல்கிஸ்ஸை, ஹேன வீதி, 51/2 என்ற முகவரியைச் சேர்ந்தவரும்தற்போது United Kingdom, HAO2TS Middlesex, Wembly, Fernbank Avenue, 106 என்ற முகவரியில் தற்போது வசிப்பவருமாகிய (755051454 V என்ற தே.அ.அ.இலக்கத்தைக் கொண்டவர்) ஐனுல் ரிஸ்வானா நாகூர் தி.மு. ரெயல் ஆகிய நான், United Kingdom HA6 1AW Middx, Northwood, 116 Green Lane என்ற முகவரியைச் சேர்ந்தவரும் 2013, யூன் 25 ஆந் திகதியன்று சொலிசிட்டர் மற்றும் சத்தியப்பிரமாணங்களுக்கான ஆணையாளர் சி. தேவிகா ஜயசிங்ஹ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், 2013, ஓகத்து 15 ஆந் திகதியன்று எழுத்து மூல அதிகாரம் கொண்டவர்களின் பதிவேடு மற்றும் அற்றோணித்தத்துவக்காரர்களின் பதிவேட்டின் 4980 ஆம் இலக்க நாட்புத்தக பதிவிலக்கம் 4980, 28 ஆம் பக்கத்தில் 125ஆம் பாகத்தில் பதிவு பெற்றதும் மொஹமெட் சபீக் மொஹமெட் பயிஸ் (Mohamed Shafeek Mohamed Faiz) என்பவருக்கு வழங்கப்பட்டதுமான வெளிநாட்டு அற்றோணித் தத்துவமானது என்னால் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. எனவே இன்றிலிருந்து எனது சார்பாக மேற்கூறப்பட்ட Mohamed Shafeek Mohamed Faiz என்பவரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பு ஏற்க மாட்டேன் என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

IYNUL RIZWAN NAGOOR nee REYAL.

07-119

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி 2020.12.07 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: டி- பிஹாரா ஒன்லைன் (பிரைவட்) லிமிட்டட்

கம்பனி பதிவு இல.: பீவீ 00231389

பதிவு முகவரி: 249/1, வைத்தியசாலை வீதி, களுபோவில, தெஹிவளை.

07-97

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## *கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2022/ 2023*

*1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக வெளிநாட்டுக் குடி வகை தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2022/2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு குடிவகை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளராகிய என்னால் 2022.08.24 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் ; அத்துடன்-*

*(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்வி பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்;*

*(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் முன்வைத்தல் வேண்டும்.*

*கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விப்பத்திரதாரர்களுக்கு மேற்படி பிறநாட்டு குடிவகை தவறணைகளை குத்தகைக்கு விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-*

(i) *கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.*

(ii) *நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.*

(iii) *அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருந்தாலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்க கையொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.*

(iv) *பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட -*

*(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,*

*(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,*

*இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அந்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.*

*4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவுநேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பில் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலையொன்றினால்*

அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையானளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப் பத்திரத் தொகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்விப் பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்த முடியும்.

7. ஏதாவது ஒரு கேள்விப்பத்திரத்தை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. வெளிநாட்டு மதுபான தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க் கணக்கில் வெளிநாட்டு மதுபானம் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையிலும் வேறு காரணங்களுக்காகவும் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க வெளிநாட்டு மதுபானத் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்க வேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு, குத்தகைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்ய முடியாதுபோன எஞ்சிய மதுபான தவறணைகளை 2020.09.26ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விப் பத்திரங்களை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்து கொள்ள முடியும்.

யூ.ஜே.எம்.எஸ்.எஸ். பீ. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும்
கங்கவட்ட கோறளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை,
2022.06.24.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகளின் பட்டியல் - 2022/2023**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 கொழும்பு வீதி | கண்டி நகரத்தில் இல. 17, யட்டிநுவர மற்றும் இல. 18, கொட்டுகொடல்ல வீதி | கண்டி நகரத்தில் இல.17, யட்டிநுவர மற்றும் இல.18, கொட்டுகொடல்ல வாக் கெடுப்புப் பிரிவிற்குள் கொழும்பு வீதி மற்றும் காசல் ஹில் வீதி சந்தி யிலிருந்து கொழும்பு வீதி வடுகொடபிட்டிய பாதையில் சந்திக்கு இடைப்பட்ட பகுதி கொழும்பு வீதி இரு மருங்கிலும் | மு. ப. 11.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 மணி தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2022.08.24 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

**வெளிநாட்டு மதுபான தவறணைகள் குத்தகை கேள்விகளுக்கான இருப்புப்பணம் - 2022/2023**

| | | |
|---|---|---|
| இல. 01 | வெளிநாட்டு குடிவகை தவறணைக்கான குத்தகை | ரூபா 5,000 |

7- 92/2

---

## ஏல விற்பனைகள்

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்*

கடன் வசதி தொடர்பு இல.: 81772745.

உதுமீய, பிதுருவெல்ல, நேசர் பீரிஸ், இல. 06 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு.ஒட்டுனு பற்றல முலச்சாரியலாகே சத்துர துஷ்மந்த குமார பொல்பிட்டிய ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.08.16ஆந் திகதிய 2137 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.08.02ஆந் திகதிய "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2022.08.02 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு அதே மல்கடுவாவ, இலங்கை வங்கி கிளை வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

1. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று ரெகோபற்று கோரளையில் வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு, பொல்கஹவெல பிரதேச சபை எல்லைகளுள் பிதுருவேல்ல கிராம அலுவலர் பிரிவு இல. 847 இல் பிதுருவேல்ல கிராமத்தில் அமைந்த "வேபொடபில்லேவ" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. டீ. பிரேமரத்ன தயாரித்த 2015.03.08 ஆந் திகதியிட்ட வரைபட இல. 26A/2015 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு- வடக்கு : வரைபட இல. 2435 இல் துண்டு இல. 3 தற்சமயம் ஏ. ஏ. எஸ். அசேல பண்டாரவின் காணியும் ; கிழக்கு : துண்டு இல. 3 உம் ; தெற்கு: துண்டு இல. 2 உம் ; மேற்கு : சந்தகலயிலிருந்து பிதுருவேல்ல வரை பிரதான பாதையும் எல்லைகளாகக் கொண்டு பதினான்கு தசம் நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 14.4பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபட இல. 26A/ 2015 இல் துண்டு இல. 10 என அடையாளமிட்ட வழியின் உரிமையும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் V60/127 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று ரெகோபற்று கோரளையில் வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு, பொல்கஹவெல பிரதேச சபை எல்லைகளுள் பிதுருவேல்ல கிராம அலுவலர் பிரிவு இல. 847 இல் பிதுருவேல்ல கிராமத்தில் அமைந்த "வேபொடபில்லேவ" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. டீ. பிரேமரத்ன தயாரித்த 2015.03.08 ஆந் திகதியிட்ட வரைபட இல. 26A/ 2015 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு- வடக்கு : துண்டு இல. 4 உம் ; கிழக்கு : துண்டு இல. 10 உம் (10 அடி பிரவேசம்) ; தெற்கு : துண்டு இல. 10 உம் (15 அடி பிரவேசம்); மேற்கு : துண்டு இலக்கங்கள் 1 மற்றும் 2 உம் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து தசம் மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15.3பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபட இல. 26A/ 2015 இல் துண்டு இல. 10 என அடையாளமிட்ட பாதையின் உரிமையும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் V60/ 128 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று ரெகோபற்று கோரளையில் வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவு, பொல்கஹவெல பிரதேச சபை எல்லைகளுள் பிதுருவேல்ல கிராம அலுவலர் பிரிவு இல. 847 இல் பிதுருவேல்ல கிராமத்தில் அமைந்த "வீபொடபில்லேவ" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. டீ. பிரேமரத்ன

தயாரித்த 2015.03.08 ஆந் திகதியிட்ட வரைபட இல. 26A/2015 இல் விபரித்த துண்டு 4 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு- வடக்கு: வரைபட இல. 5014 இல் துண்டு இல. 4, தற்சமயம் எம். ஆர். விஜேரத்னவின் காணியும் ; கிழக்கு : துண்டு இல. 5 உம், துண்டு இல. 10 (10 அடி பிரவேசம்) ; தெற்கு : துண்டு இல. 3 உம் ; மேற்கு: வரைபட இல. 2435 இல் துண்டு இல. 1, தற்சமயம் டீ. பீ. மார்கஸ் வீரக்கொடியின் காணியும் மேற்குறிப்பிட்ட வரைபட இல. 2435 இல் துண்டு 2 தற்சமயம் எச். ஏ. கே. பத்மலதாவின் காணியும் வரைபட இல. 2435 இல் துண்டு இல. 3 உம் தற்சமயம் ஏ. ஏ. எஸ். அசேல பண்டாரவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 15பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபட இல. 26A/ 2015 இல் துண்டு இல. 10 என அடையாளமிட்ட வழியின் உரிமையும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் V60/129 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) டீ. எம். சீ. என். திசாநாயக்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மல்கடுவாவ கிளை.

07-79

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல.: 80867961.

இல.147/ 19, ஜே.பி. வீதி, புத்தளம் என்னும் முகவரியைச் சேர்ந்த அப்துல் வஹாப் அப்துல் லதீப் ( றைஷா குழுமத்தின் பங்காளர்) ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.12.06ஆந் திகதிய 2153 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.11.25ஆந் திகதிய "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்த வேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு.எச்.எம்.ரி.எம். எச்.டீ. கருணாரத்ன அவர்கள் 2022.08.09 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே BOC புத்தளம் கிளை வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

1. நில அளவையாளர் நாயகம் தயாரித்து தன் பொறுப்பில் வைத்துள்ள PU 4726 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 என விபரிக்கப்பட்டுள்ள அரச காணியின் பாகம் வடமேல் மாகாணம் புத்தளம் மாவட்டம் புத்தளம் பற்று வடக்கு புத்தளம் பிரதேச செயலகர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 606 மானதீவு கிராம அலுவலர் பிரிவிலுள்ள இஸ்மாயில்புரம் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. குறித்த காணித்துண்டானது வடக்கு: முள்ளுவெளி அரச காணியையும்; கிழக்கு: முள்ளுவெளி அரச காணியையும் (RDA) வீதியையும்; தெற்கு: முள்ளுவெளி அரச காணியையும்; மேற்கு: முள்ளுவெளி அரச காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. பூச்சியம் தசம் எட்டு ஏழு இரண்டு எட்டு ஹெக்ரயர் (ஹெக். 0.8728) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி புத்தளம் காணிப் பதிவகத்தில் பக்கம் A/PUTH/04/93 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் வி. விக்னேஸ்வரன் தயாரித்த 2011.6.10 ஆந் திகதியிட்ட 5855 ஆம் இலக்க மிக அண்மைய வரைபடத்தில் தற்போது காணித்துண்டு இல. 1 என விபரிக்கப்பட்டுள்ள மேற்குறித்த காணியானது வடமேல் மாகாணம் புத்தளம் மாவட்டம் புத்தளம் பற்று வடக்கு புத்தளம் பிரதேச செயலகர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 606 மானதீவு கிராம சேவகர் பிரிவிலுள்ள இஸ்மாயில்புரம் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. குறித்த காணித்துண்டானது வழகிழக்கு: அரச காணியையும் (ஏ. டப்ளியூ. அப்துல் லதீப் என்பவரால் செப்பனிடப்பட்ட மிகைக் காணி); தென் கிழக்கு: புத்தளம் - மன்னார் (RDA) வீதியையும்; தென்மேற்கு: முள்ளுவெளி கால்வாய்க்கான ஒதுக்கத்தையும் அரச காணியையும்; வடமேற்கு: முள்ளுவெளி கால்வாய்க்கான ஒதுக்கத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு இரண்டு ஏக்கர்கள் மற்றும் இருபத்தைந்து தசம் ஒரு பேரச்சுகள் (02ஏ. 00றூ. 25.1பே.) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

### ஒதுக்கங்கள்

1. இக் காணியின் அல்லது காணியின்மேல் காணப்படும் அனைத்துக் கனிமங்களுக்குமான (இவ்வுறுதியில் பெறுமதி மிக்கவை என உள்ளடக்கப்படும்) உரித்தும் அத்தகைய கனிமங்களை அகழ்வதற்கான, தேடுவதற்கான, அங்கு வேலை செய்வதற்கான, எடுத்துச் செல்வதற்கான உரிமையும் அரசுக்கே உரியது.

2. காணி உரிமையாளருக்கு காணிமீதுள்ள உரித்தானது இவ்வுறுதியின் திகதியில் இக்காணி மீது தற்போது காணப்படும் எந்தவொரு வழி வாய்க்கால் உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்**

1. உரிமையாளர், 0.0375 ஹெக்ரயர்/ஏக்கர்கள் மேட்டுநிலம் .................... ஹெக்ரயர்/ ஏக்கர்கள் நீர்ப்பாசனக் காணி என்ற பெயரில் இங்கு குறித்துரைக்கப்பட்டுள்ள உப பிரிவின் அலகைவிடக் குறைவான பரப்பளவுடைய காணியின் பிரிக்கப்பட்டவொரு பாகத்தை கையுதிர்த்தலாகாது.

2. உரிமையாளர், இங்கு 1/ 23 என பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த அலகிலும் குறைவான காணியின் பிரிக்கப்படாதவொரு பாகத்தை கையுதிர்த்தலாகாது.

3. நிபந்தனை 01 இல் குறித்துரைக்கப்பட்ட உப பிரிவைவிடக் குறைவான பரப்பளவுடைய காணியின் பிரிக்கப்பட்டவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.

4. நிபந்தனை 02 இல் குறித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த அலகிலும் குறைவான காணியின் பிரிக்கப்படாதவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.

5. காணியோ அதன் எந்தவொரு பகுதியோ கட்டுமான காலத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட அல்லது இதன்பிறகு கட்டப்படவுள்ள நீர்ப்பாசன வேலையின் மூலம் நீர்ப்பாசனம் செய்யக்கூடியதாக இருந்தால் அல்லது இதன்பிறகு நீர்ப்பாசனம் செய்யக்கூடிதாக மாறினால் நீர்ப்பாசனம் செய்யக்கூடிய பகுதி தொடர்பில் நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டத்தில் (அத்தியாயம் 453) கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் வரும் எந்தவொரு விதிக்கும் உரிமையாளர் இணங்க வேண்டும்.

6. அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்துமூல அனுமதியையும் உரிய அதிகாரசபையிடமிருந்து உரிமம் ஒன்றையும் பெற்றுக்கொண்டாலே ஒழிய, காணியின் அல்லது காணியின் மேல் காணப்படும் கனிமங்களை உரிமையாளர் அகழவோ தேடவோ எடுக்கவோ உரிமைகொண்டாடவோ விற்கவோ வேறு விதத்தில் கையுதிர்க்கவோ கூடாது.

